# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# மூன்றாம் பத்து

## ஏழாம் திருமொழி - கள்வன் கொல்
## திருவாலி 3 - உடன்போக்கிற் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறிய பாசுரம்

** கள்வன் கொல்? யான் அறியேன் * கரியான் ஒரு காளை வந்து *
வள்ளி மருங்குல் * என்தன் மடமானினைப் போத என்று **
வெள்ளி வளைக் கைப் பற்றப் * பெற்ற தாயரை விட்டகன்று *
அள்ளல் அம்பூங்கழனி * அணி ஆலி புகுவர் கொலோ? 1

பண்டிவன் ஆயன் நங்காய்! * படிறன் புகுந்து * என் மகள் தன்
தொண்டை அஞ்செங்கனி வாய் * நுகர்ந்தானை உகந்து ** அவன் பின்
கெண்டை ஒண்கண் மிளிரக் * கிளி போல் மிழற்றி நடந்து *
வண்டமர் கானல் மல்கும் * வயல் ஆலி புகுவர் கொலோ? 2

அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! * அரக்கர் குலப் பாவை தன்னை *
வெஞ்சின மூக்கரிந்த * விறலோன் திறம் கேட்கில் ** மெய்யே
பஞ்சிய மெல்லடி * எம் பணைத் தோளி பரக்கழிந்து *
வஞ்சி அந்தண்பணை சூழ் * வயல் ஆலி புகுவர் கொலோ? 3

ஏதவன் தொல் பிறப்பு? * இளையவன் வளை ஊதி * மன்னர்
தூதுவன் ஆயவன் ஊர் * சொலுவீர்கள்! சொலீர் அறியேன் **
மாதவன் தன் துணையா நடந்தாள் * தடம் சூழ் புறவில் *
போது வண்டாடு செம்மல் * புனல் ஆலி புகுவர் கொலோ? 4

தாய் எனை என்று இரங்காள் * தடந்தோளி தனக்கு அமைந்த *
மாயனை மாதவனை * மதித்து என்னை அகன்ற இவள் **
வேய் அன தோள் விசிறிப் * பெடை அன்னம் என நடந்து *
போயின பூங்கொடியாள் * புனல் ஆலி புகுவர் கொலோ? 5

** என் துணை என்று எடுத்தேற்கு * இறையேனும் இரங்கிற்றிலள் *
தன் துணை ஆய என்தன் * தனிமைக்கும் இரங்கிற்றிலள் **
வன் துணை வானவர்க்காய் * வரம் செற்று அரங்கத்து உறையும் *
இன் துணைவன்னொடும் போய் * எழில் ஆலி புகுவர் கொலோ? 6

அன்னையும் அத்தனும் என்று * அடியோமுக்கு இரங்கிற்றிலள் *
பின்னை தன் காதலன் தன் * பெருந்தோள் நலம் பேணினளால் **
மின்னையும் வஞ்சியையும் * வென்றிலங்கும் இடையாள் நடந்து *
புன்னையும் அன்னமும் சூழ் * புனல் ஆலி புகுவர் கொலோ? 7

முற்றிலும் பைங்கிளியும் * பந்தும் ஊசலும் பேசுகின்ற *
சிற்றில் மென்பூவையும் * விட்டகன்ற செழுங்கோதை தன்னை **
பெற்றிலேன் முற்றிழையைப் * பிறப்பிலி பின்னே நடந்து *
மற்றெல்லாம் கை தொழப் போய் * வயல் ஆலி புகுவர் கொலோ? 8

காவி அங்கண்ணி எண்ணில் * கடி மாமலர்ப் பாவை ஒப்பாள் *
பாவியேன் பெற்றமையால் * பணைத் தோளி பரக்கழிந்து **
தூவி சேர் அன்னம் அன்ன நடையாள் * நெடுமாலொடும் போய் *
வாவி அந்தண்பணை சூழ் * வயல் ஆலி புகுவர் கொலோ? 9

** தாய் மனம் நின்றிரங்கத் * தனியே நெடுமால் துணையா *
போயின பூங்கொடியாள் * புனல் ஆலி புகுவர் என்று **
காய்சின வேல் கலியன் * ஒலி செய் தமிழ் மாலை பத்தும் *
மேவிய நெஞ்சுடையார் * தஞ்சம் ஆவது விண்ணுலகே 10

**அடிவரவு:** கள்வன் பண்டு அஞ்சுவன் ஏதவன் தாய் என்துணை அன்னையும் முற்றிலும் காவி தாய்மனம் நந்தா

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---